**திருச்சிராப்பள்ளி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் – திரு.ர.பாலமுரளி, எம்.ஏ, பி.எட்.,**
**ந.க.எண்.10221/அ1/2022 நாள். 21 .12.2022**

பொருள்: பள்ளிக்கல்வி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – மணப்பாறை மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (தணிக்கை) இளநிலை உதவியாளராக 23.09.2020 முற்பகல் முதல் நியமனம் பெற்று விருப்பமாறுதலில் தற்போது சூலக்கரை அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் செல்வன். ம. ராஜா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.151, பள்ளிக்கல்வித் (பக1(1)) துறை நாள்.09.09.2022
2. சென்னை – 3 தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம் எண்.2563/PSD12/2020 நாள்.21.07.2020
3. திருச்சிராப்பள்ளி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 4646/அ1/2020, நாள்.17.09.2022
4. மணப்பாறை மாவட்டக்கல்வி அலுவலரின் ந.க.எண்.3958/அ1/2022 நாள். 26 .09.2022

-----

செல்வன். ம. ராஜா என்பார், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV–இன் கீழ் 2018–2019 மற்றும் 2019–2020 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டு பார்வை 2–இன்படி பள்ளிக்கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை (3)இல் காணும் செயல்முறைகளின்பட, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை மாவட்டக் கல்வி அலுவலகத்தில் (தணிக்கை) இளநிலை உதவியாளராக 23.09.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து பார்வை 1–இல் காணும் அரசாணையின்படி, சென்னை பள்ளிக்கல்வி ஆணையரக அலுவலகத்தில் நடைபெற்ற கலந்தாய்வில் கலந்துகொண்டு, விருப்பமாறுதலில் தற்போது விருதுநகர் மாவட்டம் சூலக்கரை அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக செல்வன். ம. ராஜா என்பார் பணிபுரிந்து வருகிறார்.

தனியருக்கு பார்வை (4) ல் காணும் கடிதத்தின்படி இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை கோரும் கருத்துருக்கள் பரிந்துரை செய்து பெறப்பட்டுள்ளது.

மேற்காண் கருத்துருக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தனியருக்கு கீழ்காணும் நிபந்தனைகளின்படி இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பெயருக்கெதிரே குறிப்பிட்ட தேதியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| பணியாளர் பெயர் / பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியேற்ற நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|
| செல்வன். ம. ராஜா<br>இளநிலை உதவியாளர்,<br>அரசு மேல்நிலைப்பள்ளி,<br>சூலக்கரை<br>விருதுநகர் மாவட்டம் | 23.09.2020 முற்பகல் | 23.09.2020 முற்பகல் |

நிபந்தனைகள்

1. தனியர் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுவார்.
2. தகுதிகாண் பருவக் காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினையும், மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்விலும் கண்டிப்பாகத் தேர்ச்சிப்பெற வேண்டும்.
3. தகுதிகாண் பருவம் முடித்த அடுத்த நாள் முதல் இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்க வேண்டும்.

மேற்கண்ட விவரத்தினை சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.
இணைப்பு – அசல் பணிப்பதிவேடு ஒரு தொகுப்பு

முதன்மைக்கல்வி அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.

26.12.2022

பெறுநர்
செல்வன். ம. ராஜா,
இளநிலை உதவியாளர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
சூலக்கரை,
விருதுநகர் மாவட்டம்.
(உரிய வழியாக)

நகல்

1. மாவட்டக் கல்வி அலுவலர், திருச்சிராப்பள்ளி
2. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, சூலக்கரை, விருதுநகர் மாவட்டம். (தொடர் நடவடிக்கையின் பொருட்டு)
3. கோப்பிற்கு